*கவனிக்க.- 27.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1831 - 2013 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2013.10.04

*1831 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1386 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1390 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1386 | நானாவித அறிவித்தல்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில் பற்றுபிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட மாங்காடு எருவில் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை 2013 நவெம்பர் – 2014 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டு கள்ளுத் தவரணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட எருவில் கள்ளுத் தவறணைகளுக்கான 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி வரை கள்ளிற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம், வரை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச்சபை கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறுரூபா( ரூபா 1500 )பணத்தை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்தி பெறப்பட்டும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2013.10.14 ஆந் திகதி முதல் 2013.10.21 ஆந் திகதி பி.ப. 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளர்களினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% இற்கு குறைவாக இருத்தலாகாது இப் பெறுமதி சான்றிதழ், கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் பிழையாக நிரப்பப்பமட்டிருந்தால் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு கட்டிய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்கு தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவரணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிபடுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப் படிவம் வழங்கப்படும் (நிதி அமைச்சின் 01/2012 இலக்கம் கொண்ட 2012 /.01.05 ஆந் திகதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக காணப்படுதல் வேண்டும்.

7. ஏனைய விபரங்கள் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி.சுதாகர்,
பிரதேசசெயலாளர்,

பிரதேச செயலகம்,
மண்முனை தென் எருவில் பற்று,
களுவாஞ்சிக்குடி,
2013.09.10

கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்:-

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணையின் பெயர் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| எருவில் கிராமம் | எருவில் | TTஇல.06 | 22.10.2013 | மு.ப 11.30 மணி |

**குறிப்பு**.- 1. கேள்விச் சபை 2013.10.22 ஆம் திகதி முற்பகல் 11.30மணிக்கு கூடும்.

2.விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் மறு விற்பனை 2013.10.29 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு நடைபெறும்.

10-95

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எச்ஜெயலங்கா டெக்னொலொஜிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனி இலக்கம் : பீவீ 94176

கூட்டிணைப்புத் திகதி : 2013.08.22

பதிவு முகவரி : இல. 912A, பஹலவெல வீதி, பத்தரமுல்லை.

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவெட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

10-03

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : த டிரவல் மெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 75336
கூட்டிணைப்புத் திகதி : 04.11.2010
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 618/1/1, காலி வீதி, கொழும்பு 03.

செயலாளர்.

10-30

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கீழக் குறிப்பிட்டுள்ள கம்பனி பெயர் மாற்றப்பட்டு கூட்டிணைக் கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் புதிய பெயர்: டென்றோ புறோடி யூசெர் லங்கா(பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பழைய பெயர் : சில்வமில் பவர் அன்ட் எனேயி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 86953
கூட்டிணைப்புத் திகதி : 2012.08.23
அலுவலக முகவரி : இல. 148/1, கின்சி வீதி, கொழும்பு 08.

எ.எவ்.ஏ.கொப்பரேற் சேவிசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

10-29/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கே. எம்.ஆர்.ஐ.லங்கா (பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 89389
கூட்டிணைப்புத் திகதி : 2012.11.15
அலுவலக முகவரி : எம்பய றெசிடென்சிஸ் A /23/2,51 பிரேபுறுக் பிளேஸ், கொழும்பு 02.

எ.எவ்.எ.கோப்ரேற் சேவிசஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
கம்பனிச் செயலாளர்கள்.

10-29/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : என்வயரோ பவர் லங்கா (பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 86814
கூட்டிணைப்புத் திகதி : 2012.06.28
அலுவலக முகவரி : இல. 148/1, கின்சி வீதி,கொழும்பு 08.

எ.எவ். ஏ.கோப்பரேட் சேவிசஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்
கம்பனி செயலாளர்கள்.

10-29/3

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கே.எம். ஆர். ஐ. எஸ். எம். ஜீ. அசற் கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 88858
கூட்டிணைப்புத் திகதி : 2012.10.15
அலுவலக முகவரி : எம்பய றெசிடென்சிஸ்,இல.A /23/2/51 பிறே புறுக் பிளேஸ்,கொழும்பு-02

ஏ.எவ்.ஏ.கோபரேட் சேவிசஸ்
(பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்

10-29/4

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சில்வமில் பவர் அன்ட் எனேயி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 86953
கூட்டிணைப்புத் திகதி : 2012.07.10
அலுவலக முகவரி : இல. 148/1, கின்சி வீதி, கொழும்பு 08.

எ.எவ்.ஏ.கொப்பரேற் சேவிசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

10-29/5

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : என்.பீ.சீ.ஓப்ஷோ சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 93947
கூட்டிணைப்புத் திகதி : 2013.08.06
அலுவலக முகவரி : இல. 14, ஸ்ரீ தர்ம கீர்த்தியாராம வீதி, கொழும்பு 03.

எ.எவ். கோப்பரேட் சேவிசஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்.

10-29/6

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அசோசியேசன் ஒவ் கிளியரிங் ஃபோவேட்டிங் ஏஜன்ட் .
பதிவு இலக்கம் : ஜீஏ 2731
கூட்டிணைப்புத் திகதி : 2012.08.07
பதிவு முகவரி : இல. 14, தர்மகீர்த்தியாராம வீதி, கொழும்பு 03.

எ.எவ்.எ.கோப்பரேட் சேவிசஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்

10-29/7

## பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், 2013 ஓகஸ்ட் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து (இந்தக் கம்பனி) பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : லாவ்ஸ் டேர்மினல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 6796
கம்பனியின் பதிவு முகவரி : இல.14, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு 04.
கம்பனியின் புதிய பெயர்: ஆனந்தயா ரிசோட்ஸ் என்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டெட்

சபையின் பணிப்புரையின் பேரில்,

கீர்த்தி பத்திராஜ சட்டத்தரணி,
கம்பனிச் செயலாளர்.

10-16

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையின் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் :-

கம்பனியின் பெயர் : வொன்லன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 60442
திகதி : 2007.06.27
பதிவு முகவரி : இல. 69/7, ரொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 07.

அலுவலக செயலாளர்.

10-89

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : கமுயுனிடி லவ்லிஹுட் அக்சன் பெஸிலிடி நெட்வேர்க்.
பதிவு இலக்கம் : ஜீஏ 2490
கூட்டிணைப்புத் திகதி : 2010.11.29
கம்பனியின் முகவரி : இல.102/2, கொஸ்வத்த வீதி, நாவல, ராஜகிரிய.

கம்பனிச் செயலாளர்.

10-72

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : த்ரீ சீஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 74890
கூட்டிணைப்புத் திகதி : 2010.10.14
பதிவு முகவரி: இல.603/1, ஏ, போகஹா சந்தி, நிதஹேன, கொதடுவ.

10-73

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைவாக 2012 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ஆந் திகதி தொடக்கம் ஓஷன் லின்க் சீ சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனியானது தமது பெயரை எக்வா லங்கா ரிசோசஸ் (பிறைவேட்)

லிமிட்டெட் என மாற்றியுள்ளதென மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர்* :ஒசன் லின்க்சீ சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 65119
*கம்பனியின் முகவரி* : இல. 115/17, அன்டர்சன் ரோட், நெதிமால, தெஹிவளை.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஜே.எம்.டி. ஆரியரத்ன,
ஒஷன் லின்க் சீ சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்.

10-118

## பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைவாக மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவான பொதுஅறிவித்தல்

*கம்பனியின் முந்திய பெயர்* : அஸ்பிக் இன்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ட்ரக்சன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 8603
*கம்பனியின் முகவரி* : இல. 181, தர்மபால மாவத்தை, கொழும்பு07.
*கம்பனியின் புதிய பெயர்* : இன்டர்வெஸ்ட் இன்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ட்ரக்சன் (பிறைவேட்) லிமிட்டெட்.

சாட் பிஸ்னஸ் சிஸ்டம் (பிறைவேட்) லிமிட்டெ்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.141/3, வோக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

10-115

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கஹவத்த கப்பெல சேனானி என்ற கப்பெல கட்டடியுலாகே நாலனி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எம்.ஏ. விமலசுந்தர அவர்களால் 1988.10.21 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 14226 என்ற அற்றோணி அனுமதிப்பத்திதை இரத்துச் செய்து இதற்கொண்டு அவரால் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

10-35

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, இல.48, அபேரத்ன மாவத்தை, தமரா பத்மகாந்தி பீரிஸ் சூரியப்பெரும, வி/ மு தியகம முதியன்சேலாகே தமரா பத்மகுமாரி தற்போது ஜஎம் ஈச்வோட் 15, 69126, ஹிடில்பேர்க், ஜேர்மனியில் வசிக்கும் நான், கொழும்பு சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான தேசநந்த பண்டார புலத்கம என்பவரால் 6.12.2004 ஆம் ஆண்டு நாட்குறிப்பு இலக்கம் 15808 290 அத்தியாயம் 149 ஆம்பக்கத்தில் பதிவாகியுள்ள எழுதப்பட்டு உறுதி செய்யப்பட்டு பொரலஸ்கமுவ 52/1, அபேரத்ன மாவத்தையில் வசிக்கும் மனேரா குடாகே என்பவருக்கு வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்து இரத்து செய்து விட்டதாக பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

மேலும் இவ்வறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்குப் பின்னர் அவர் இந்த அற்றோணி அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்கின்ற எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் செயற்பாடுகளுக்கும் நான் எவ்விதத்திலும் பொறுப்புதாரியல்ல என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

தமரா பத்மகாந்தி பீரிஸ் சூரியப்பெரும,
வி/மு தியகம, முதியன்சேலாகே தமரா பத்ம குமாரி.

10-122

## அற்றோணித் தத்துவத்தை மீளப் பெறுதல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 31.10.2005 ஆந் திகதியிடப்பட்டு 616 ஆம் இலக்கத்தில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பந்துல ஹபுதந்திரிகே முகதாவில் இல. 27, பண்டார மாவத்தை, இத்துல் கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த சரத் பெரேரா சமரநாயக்க என்பவரின் பெயரில் இல. 27, பண்டார மாவத்தை, இத்துல் கோட்டையைச் சேர்ந்த வெலிகம அப்புஹாமிலாகே ஜெயந்த தர்மசிறி பெரேரா விஜயரத்ன ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் இன்று முதல் மீளப் பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. இன்று முதல் அற்றோணி தத்துவக்காரரால் மேற்குறிப்பிட்ட தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

வெலிகம அப்புஹாமிலாகே ஜெயந்த,
தர்மசிறி பெரேரா விஜயரத்ன.

10-172

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைவாக பொதுஅறிவித்தல்:-

*கம்பனியின் பெயர்* : ஹெல்தி லங்காஅலையன்ஸ் ஃபொ டெவலப்மன்ட லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : ஜீ எல் 2150
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 91, தேவாலய வீதி, கம்பஹா.
*பதிவு செய்யப்பட்ட திகதி* : 15.07.2011

சபையின் கட்டளைப்படி

பிறிலியன்ற் புறேமோட்டர்ஸ் அன்ட் கன்சல்ரன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெ்,

10-140

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து நிலமனை ஏல விற்பனை

*கொழும்பு 03, காலி வீதி, இல. 451 இல் அமைந்த திரு. என். மனோகரனின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த வெள்ள வத்தை, அனுலா வீதி, இல. 23/2 இல் அமைந்த ஆதனத்தின் விற்பனை*

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 26.07.2013 ஆந் திகதிய 1821ஆம் இலக்க வர்த்தமானியிலும் 15.07.2013 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை,கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர் T&H ஏலதாரர் அவர்களினால் 19.10.2013 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலும் மாநகர சபை எல்லைகளிளும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவு, பாமன்கடை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பாமன்கடை மேற்கு வட்டாரம் இல. 46 இல் வெள்ளவத்தையில் அனுலா ரோட்டில் அமைந்த வெள்ளவத்தை அனுலா ரோட் வரிமதிப்பு இலக்கம் 23/2 ஐக் கொண்ட கட்டிடத்துடன் ''கெலண்கடுவேவத்த'' என அழைக்கப்படும் காணியின் பதிவு வரைபடம் இல. 2 இல் (வெள்ளவத்தை) C1 மற்றும்C2 என்னும் இரண்டு தொடர்ச்சியான காணித்துண்டுகளின் பிரிக்கப்பட்ட பாகம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜேம்ஸ் றொட்ரிகோ தயாரித்த 1939 யூலை 01 ஆம் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 3117 இல் விபரித்த துண்டு P இன் உப பிரிவு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் A.P.S. குணவர்தன தயாரித்த 1968 நவம்பர் 06 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 134 இல் விபரித்த P 3 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : . துண்டு P2 ; கிழக்கில்: துண்டு 101 B ; தெற்கில்: துண்டுB 4; மேற்கில் :துண்டு U (பாதை ஒதுக்கம்) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 134 இன் படி பதினைந்து தசம் சைபர் மூன்று பேர்ச்சுகள் (0ஏ.0றூ.15.03 பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.இது கொழும்பு காணிப்பதிவகத்தில் வெள்.192/148 இல் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலும் மாநகர சபை எல்லைகளிளும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவு,பாமன்கடை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெள்ளவத்தையில் அனுலா ரோட்டில் அமைந்த ''கெலண்கடுவேவத்த'' என அழைக்கப்படும் காணியின் பதிவு வரைபடம் இல. 2 இல் (வெள்ளவத்தை) C1 மற்றும்C2 என்னும் இரண்டு தொடர்ச்சியான காணித்துண்டுகளின் பிரிக்கப்பட்ட பாகம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜேம்ஸ் றொட்ரிகோ தயாரித்த 1939 யூலை 01 ஆம் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3117 இல் விபரித்த துண்டு U என அடையாளமிட்ட (பாதைக்கு ஒதுக்கப்பட்ட ) காணித்துண்டு வடக்கில் : .65 ஆவது ஒழுங்கையும் (தற்சமயம் அனுலா ரோட்) ; கிழக்கில்: துண்டு P ; தெற்கில்: துண்டுT மேற்கில் :துண்டுகள் S.R. மற்றும் Q எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3117 இன் படிபதினேழு தசம் மூன்று ஆறு பேர்ச்சுகள் (0ஏ.0றூ.17.36 பே.) விஸ்தீரணமுடையது.இது கொழும்பு காணிப்பதிவகத்தில் வெள்.175/262 இல்பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ.ஏ.ஜீ.வீரக்கோண் பண்டா,
தொடர்பாடல் முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அறவிடல் தொகுதி அலகு,
இல.01, இலங்கை வங்கி மாவத்தை.
கொழும்பு 01.
30.08.2013

10-125

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து நிலமனை ஏல விற்பனை

கடன் தொடர்பு இல.71834485 மற்றும் 72349235

*சாவகச்சேரி, நுணாவில், A 9 பாதை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சீவரட்ணம் கோபிதாசன் மற்றும் திருமதி ரஞ்சிதமலர் கோபிதாசன் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை*

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 30.08.2013 ஆந் திகதிய 1826ஆம் இலக்க வர்த்தமானியிலும் 21.08.2013 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை

முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 692, K.K.S. ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.K.P. பாலகிருஷ்ணன் அவர்கள் 30.10.2013 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வட மாகாணம், யாழ் மாவட்டம், தென்மாராட்சிப் பிரிவில் நாவற்குழி பகுதியில் கைதடி நுணாவிலில் அமைந்த மருதையினார் சட்டியும் ஏனைய பகுதிகளும் என அழைக்கப்படும் காணி உத்தரவு நிலஅளவையாளர் A. கமலசேகரம் தயாரித்த 2010.09.26 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 4304 இல் துண்டு 1 என விபரித்த33 லாச்சம் V.C. மற்றும் 06 குழிகள் விஸ்தீரணமுடைய எனினும் தற்சமயம் 32 லாச்சம் V.C. யும் 14.30 குழிகளும் விஸ்தீரணமுடைய காணியின் தற்சமயம் எல்லைகளாவன: வடக்கில்: கண்டி ரோட்டும் ; கிழக்கில்: தாமோதரம் பிள்ளை பொன்னையா மற்றும் சின்னத்தம்பி அருளையா மற்றும் பங்குரிமையாளர்களின் ஆதனங்களும்; தெற்கில்: சுப்ரமணியத்தின் மனைவி பராசக்தியினதும் சின்னத்தம்பி; அருளையாவினதும் ஆதனங்களும் ; மேற்கில் : ஒழுங்கையும் ஆகும். இவை யாவும் F 810/227 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

G. சகாதேவன்,
கிளைமுகாமையாளர்.

இலங்கை வங்கி,
மானிப்பாய் மேற்றரக் கிளை,
13.09.2013

10-145

---

## டிஎவ்சீசீ வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

### 1867 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடமையின் விபரம்

**வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம், மாறவில பதிவுப் பிரதேசத்திற்கு உட்பட்ட, தெற்கு பிட்டிகல் கோரளே,கம்மல் பற்று, வென்னப்புவ கிராமத்தில் அமைந்துள்ள, மாதங்கஹவத்துகொடச மற்றும் கிரிகோன்கஹவத்துகொடச என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் வை.எம்.ரஞ்சித் யாப்பா அவர்களால் வரையப்பட்ட 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 1852 A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் மீள்அளவை செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. லக்ஷ்மன் எச் பெர்னாந்து அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட 6095 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.**

காணியின் விஸ்தீரணம்: 00ஏ.01றூ.00பேர்

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம்15 ஆம் திகதி யிடப்பட்ட 1867 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசின் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைந்த இல. N(PVS 34072 என வென்னப்புவயில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட அக்வா வேர்ள்ட் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனம் (இதன் பின்னர் 'கம்பனி' என அழைக்கப்படும்) மற்றும் மீரிகமயில் வசிக்கும் குறானகே மேரியன் ஸ்டெலா ரோஸ் பெரேரா (கம்பனியின் பணிப்பாளரும் அனுசரணையாளருமான) (கம்பனியின் அனுசரணையாளர் இதன் பின்னர் கூட்டுக் கடனாளிகள் என அழைக்கப்படும்) அவர்களால் DFCC வங்கிக்கு அடகு வைக்கப்பட்ட மீட்கப்படாத சொத்து DFCC வங்கியினால் அமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**:- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10%.(நூற்றுக்கு பத்து);
2. உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்);
3. விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை);
4. மொத்த விளம்பரச் செலவான ரூ.80,000;
5. எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.500;
6. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ.2000.

கொள்முதலில் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டிஎவ்சீசீ வங்கியின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும் / இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு ஒரே ஏலவிற்பனையாளர்,
121 வருடகாலச் சேவை அலுவலகம்,
நகர அலுவலகமும் காட்சியறையும்:
இல. 290, ஹவ்லொக் றோட்,
கொழும்பு 05
தொலைபேசி: 011-2502680,
2585408,
தொலைநகல்: 011-2588176
மின் அஞ்சல்:
schokman@samera1892.com

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி,
கண்டி.
தொலைபேசி: 081-2227593
தொலைநகல்: 081-2224371
மின் -அஞ்சல்: schokmanKandy@sltnet.lk

இணையத்தளம் : www.sandslanka.com

10-53

**டிஎவ்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***912 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடமையின் விபரம்***

***மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, றாகம் பத்து, தண்டுகம உப அலுவலகம் மற்றும் ஜா-எல பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட, ஏக்கல, குருந்துவத்த கிராமத்தில் அமைந்துள்ள, குரூஸ்வத்த எனவும் மஹவத்த எனவும் அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அலவையாளர் கே.ஈ.ஜே.பீ.பெரேரா அவர்களால் வரையப்பட்ட 1993 ஆம் ஆண்டு யுன் மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட 3045 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 46 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் மீள் அளவை செய்யப்பட்ட, அளவையியளாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட Gam 1703 ஆம் இலக்க முதனிலை வரைபடத்தில் துண்டு 46 என அழைக்கப்படும் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.***

*காணியின் விஸ்தீரணம்: 00ஏ.00றூ.9.53 பேர்.*

*அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள்,தோட்டங்கள், மற்றும் அனைத்தும் அடங்கலாக கலென்பிதுனுவெவ, துணுமடலாவ என்ற முகவரியில் 'ரம்சான் ஸ்டோர்ஸ்' எனும் பெயரில் வியாபாரத்தை நடாத்திவரும் அப்துல் காதர்ஜீ மொஹமட் ஹம்சா (இதன் பின்னர் 'பயனாளி' என அழைக்கப்படும்) என்பவரால் அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு யூ.விஜேரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம்ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆம் திகதியிடப்பட்ட 912 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் டிஎவ்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து டிஎவ்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை:-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்:

1. கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10%.(நூற்றுக்கு பத்து);
2. உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்);
3. விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை);
4. மொத்த விளம்பரச் செலவான ரூ.78,000;
5. எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.500;
6. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ.2000.

கொள்முதலில் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும் / இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு ஒரே ஏலவிற்பனையாளர்,
121 வருடகாலச் சேவை அனுபவம்,
நகர அலுவலகமும் காட்சியறையும்:
இல. 290, ஹவ்லொக் றோட்,
கொழும்பு 05
தொலைபேசி: 011-2502680, 2585408,
தொலைநகல்: 011-2588176
மின் அஞ்சல்: schokman@samera1892.com

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி,
கண்டி.
தொலைபேசி: 081-2227593
தொலைநகல்: 081-2224371
மின் அஞ்சல்: schokmanKandy@sltnet.lk

இணையத்தளம் : www.sandslanka.com

10-52

---

**செலான் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளால் கடன்கள் அறவீடு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை அறிவித்தல்*

ஆதனம் விற்பனை

***வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில் அநுராதபுரம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட, நுவரகம் பலாத்த திம்பிரிகடவெலவில் அமைந்துள்ள காணித்துண்டு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டி.பி. அத்தநயாக்கவினால் உறுதிப் படுத்தப்பட்ட 1994.07.04 ஆந் திகதியிடப்பட்ட இல.4429 இல் குறித்துக்காட்டப்பட்ட இல. 01 வகையில் பிரிக்கப்பட்ட இந்தக் காணி அநுராதபுரம் நிலப் பதிவாளர் காரியாலயத்தில் A 323/261 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

***பரப்பளவில் (02ஏ.02றூ.00பேர்.)***

***பரப்புள்ள காணித்துண்டும் அதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், அனைத்தும்.***

***வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில் அநுராதபுரம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட, நுவரகம் பலாத்த திம்பிரிகட***

**வெலவில் அமைந்துள்ள காணித்துண்டு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டி.பி. அத்தநயாக்கவினால் உறுதிப்படுத்தப் பட்ட 1994.07.04 ஆந் திகதியிடப்பட்ட இல.4429 இல் குறித்துக் காட்டப்பட்ட இல. 02 வகையில் பிரிக்கப்பட்ட இந்தக் காணி அநுராதபுரம் நிலப் பதிவாளர் காரியாலயத்தில் A 323/262 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**பரப்பளவில் (02ஏ.02றூ.00பேர்.)**

**பரப்புள்ள காணித்துண்டும் அதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், அனைத்தும்.**

குறித்த காணி கமே கெதர நூஹூ லெப்பை முகம்மட் றாசீக் என்பவர் அடகுதாரராக தவணைக் கடன் அடிப்படையில் பெற்றுக் கொண்டிருப்பதால் அவரால் இந்தக் கடனையும் அதற்கான வட்டியையும் முழுமையாகவோ பகுதியாகவோ செலுத்தத் தவறியதால் செலான் வங்கி பீஎல்சீ மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப மேற் குறிப்பிட்ட ஆதனத்தை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனைமூலம் நாம் விற்பனை செய்யவுள்ளோம்.

2013 ஒற்றோபர் 25 ஆந் திகதி ந.ப. 12.00 மணிக்கு ஏல விற்பனை நடைபெறும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:-** கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

1. முடிவு செய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து (10%) சதவீதம்;
2. விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90% வீதமும் செலான் வங்கி பீஎல்சி யின் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்;
3. ஏலவிற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2 .5% );
4. உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு 1% சதவீதம் செலுத்தப்படல் வேண்டும்;
5. வங்கிகளினால் தாயாரிக்கப்படும் பத்திரங்களுக்கான செலவினமும், ஏனைய செலவுகளும் 100% ;
6. எழுதுனர், முறசறைவோர் கூலியாக ரூபா 1000;
7. விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிஸ் கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் ரூபா 2000.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்:-
பிரதான முகாமையாளர்- சட்டம்
செலான் வங்கி P.L.C., செலான் டவர்,
இல. 90, காலி வீதி, கொழும்பு 03,
தொலைபேசி இல.011-2456474, 011-2456458

திரிவன்கா C சேனாநாயக்க,
அனுமதிபெற்ற ஏலவிற்பனையாளரும் நீதிமன்ற கமிஷனரும்,
கொழும்பு வியாபார அனுமதிபெற்ற நீதியரசர்,
அரச தனியார் வங்கி,
இல.182, 3 ஆம் மாடி, ஹள்ஸ்றொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி: 011-2388318

அரச தனியார் வங்கி,
இல.182, 3 ஆம் மாடி,
ஹள்ஸ்றொப் வீதி,
கொழும்பு -12.
தொலைபேசி: 011-2388318,

10-138

## நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளால் கடன்கள் அறவீடு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை அறிவித்தல்

சொத்து ஏல விற்பனை

**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், வடக்கு மண்முனை காரியதரிசி பிரிவிலுள்ள, மண்முனைபற்று மட்டக்களப்பு மாநகர சபையின் உள்ளடக்கத்தில் நகரப்பகுதியில் இல. எஸ்.யு.6 இல் அமைந்துள்ள நாவற்கேனி கிராமத்தில் அமைந்துள்ள பேச்சிஅம்மன் கோவில் வீதியில் வரிப்பணம் 69/1 ஆம் இலக்கதில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.பி.பே. திஸ்ஸ வீரசிங்கம் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல.830/ 2010 ஒக்டோபர் மாதம்12 ஆந் திகதி குறித்துக்காட்டப்பட்ட "பனையியட்" வளவு (காணி) ஏலச் சேனை வளவு 65 யட் வளவு, சேனை வளவு(காணி)பொன்னக்கா வளவு (காணி) என பிரிக்கப்பட்டுள்ள காணிகளாகும். (இந்த காணி மட்டக்களப்பு நிலஅளவையாளர் அலுவலகத்தில் இல.ட 659/83, இல.ஜீ.எம்.21/73 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**காணியின் பிரமாணம் (00ஏ.03றூ.37.5பேர்.)அல்லது 0.3984 ஹெக்டேயர் 5ஆம் பெரும்பகுதியான நிலமும் அதற்கு சொந்தமான உரிமைகள் அனைத்தும் .**

**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், வட மண்முனை காரியதரிசி பிரிவில், மண்முனைபற்று, மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட, பட்டிணபகுதியில் இலக்கம் எஸ்.யு.6 இற்குட்பட்ட நாவற்கேனி கிராமத்தில் அமைந்துள்ள பேச்சிஅம்மன் கோவில் வீதியில் வரிப்பண இலக்கம் 63/ 18, 63/23,63இ, என அழைக்கப்படும் 'பனையியட்" காணி ஏலச் சேனை காணி, மருதயட் காணி, சேனை வளவு(காணி) பொன்சேக்கா காணிக்கும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.இ. கே. திஸ்ஸ வீரசிங்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 993/ 2010, 2010 , நவம்பர் மாதம் 25 ஆந் திகதி குறித்துக்காட்டப்பட்ட பிரித்து எடுக்கப்பட்ட காணித்துண்டுகள் இலக்கம்16,17,18,19,20,21,22, காணித்துண்டுகளாகும் (இந்தக் காணித்துண்டுகள் மட்டக்களப்பு நில அளவையாளர் அலுவலகத்தில் இல. பி 727/239, ஜீ. எம். 21/72 இல் பதிவு செய்யப்பட்டுள்ளன).**

**காணியின் பிரமாணம் இரண்டு றூட் இருபத்தைந்து தசம் இரண்டு மூன்று பேர்ச்சும் (00ஏ.02றூ.25.23பேர்.) பெரும் பகுதியான நிலமும் அதற்கு சொந்தமான உரிமைகள் அனைத்தும்**

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற நொத்தாரிசு எஸ்.இளங்கோவன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 6281, 2011 ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி இடப்பட்டதும் இலக்கம் 62822 உம் 2011, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி அடகு வைத்தவரினால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள

1 ஆம், 2 ஆம் அட்டவணைகளில் அடங்கியுள்ள எல்லாவற்றிற்கும் உரிமையும், உடமைகளும் "அபிஷ சப்ளையர்ஸ்" என்ற பெயரிலுள்ள பங்கு வியாபாரமாக நடத்திக்கொண்டு வரும் அரசரத்தினம் ஷெல்டனும், கிங்ஸ்லி ஜெயறீவ் என்பவர்களால் அடகு வைக்கப்பட்டு அனுபவித்து வந்த சலுகைகள் அனைத்தையும் மீண்டும் செலுத்துவதற்காக பிணையாக நேஷன் ட்ரஸ்வங்கி பி.எல்.சி. பிணையாக வைத்துள்ளதை கைப்பற்றப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

நேஷன் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சியாகிய எங்களால் கைப் பற்றப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் 2ஆம் அறிக்கையின் படி அவற்றின் உரிமையாளர்கள் என்ற வகையில்

2013ஆம் ஆண்டு ஒற்றோபர் 29 ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கும் 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கும் அந்தக் காணி இருக்கும் அதே இடத்தில் எங்களால் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**காணியின் விபரம்**: பார் வீதியில், 100 மீற்றர் வரும் போது, பொலிஸ் ஸ்தாபனத்தின் அருகில் சுற்று வட்டத்தில் வலது பக்கமாக கொழும்பு திருகோணமலை வீதியில் 35 கி.மீ. வரை வரும் போது யுராணி பொலிஸ் காவல் நிலையத்தை சந்திக்கலாம். அங்கிருந்து இடது பக்கம் திரும்பி புதிய வீதியில் 1 1/2 கி.மீ. வரும் போழுது வலது பக்கம் திரும்பி பேச்சி அம்மன் வீதியில் 1/4 கி.மீ. வரும் பொதுவலது பக்கமுள்ள குரு வீதியில் 100 மீற்றர் வரும் போது குறிப்பிடப்பட்ட இடம் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**செலுத்த வேண்டிய விபரம்**:- விற்பதற்கு முடிவானதன் பின் கீழ் குறிப்பிட்ட முறையில் ஏல விற்பனையாளரிடம் பணம் செலுத்தப்படல் வேண்டும்.

1. மொத்த தொகையின் பத்து (10%) சதவீதம்
2. மிகுதி தொகையான 90% பணம் செலுத்த வேண்டிய தினத்திற்கு 30 நாட்களுக்குள் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி யின் பிரதான அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.
3. ஏலவிற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2 .5% )
4. உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக ஒரு (1% ) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும்
5. வங்கிகளினால் தாயாரிக்கப்படும் பத்திரங்களுக்கான செலவினமும், ஏனைய செலவுகளும் 100%
6. குமாஸ்தா உதவிகளுக்கான கொடுப்பனவு ரூபா 500
7. விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிஸ் கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் ரூபா 2000

உரித்து உரிமைகளை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம் :-

முகாமையாளர்- சட்டம்
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி P.L.C.,
இல. 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 02,
தொலைபேசி இல.011-4218746.

திரிவன்கா & சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,

இல.182, 3 ஆம் மாடி,ஹள்ஸ்றொப் வீதி,
கொழும்பு 12
தொலைபேசி: 011-2388318,

10-137

## செலான் வங்கி பி எல் சி - அபிவிருத்தி வங்கிப் பிரிவு

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளால் கடன்கள் அறவீடு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை அறிவித்தல்*

*"கடன் பட்டோர்" என்ற வகையில் பாணந்துறையைச் சேர்ந்த யாலகலகே அமில சன்ஜீவ குமார பீரிஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி எல் சி இற்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து*

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் கிழக்கு கோரளை வடக்கு பஸ்துன் மகாபத்துவில் கெவிட்டியாகல கிராமத்தில் அமைந்துள்ள ஒக்கந்தகொடல்ல என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. கன்னங்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 06.08.2004 ஆந் திகதியிட்ட நிலவரைபட இல.917/2004 இற்கமைய கட்டடங்கள், மரங்கள்,மற்றும் அனைத்துடனும் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டதுமான துண்டு 3 ஒரு றூட் முப்பத்தியொன்று தசம் இரண்டு ஐந்து பேர்ச்சர்ஸ் (00ஏ.1றூ.31.25பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட நிலவரைப்பட இல.917/2004 கொண்டுள்ளது.**

மேலே விவரிக்கப்பட்ட காணியை அதே இடத்தில் 2013 ஒற்றோபர் 24 ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**: அகலவத்தையிலிருந்து கலவன வீதி மார்க்கமாக சுமார் 2 கி.மீ வரை பயணம் செய்தால் வலது பக்கத்தில் வரும் மொரகல வீதியால் சுமார் 5.5 கி.மீ. தூரம் சென்றால் தியபத்துகம சந்தியை அடையலாம். இக்குறிப்பிட்ட சொத்து தியபத்துகம வீதியால் திரும்புகையில் வீதியின் ஓரமாக அமைந்திருக்கும்.

தீர்மானம் பற்றிய அறிவத்தலுக்கு 24.06.2011 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 16.06.2011 ஆந் திகதிய "டெய்லி மிரர்" "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 21.06.2011 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**: வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%)
2. உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை சதவீதம் (2 .5% )
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சி இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்பு செய்யப்படாவிடில் முன் வைப்புச்செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகமையாளர் (சட்டம்), செலான் வங்கி PLC செலிங்கோ செலான் டவர், இல.90 காலி வீதி, கொழும்பு 03 என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொ.பே. 2456458,2456453. உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

ரி அன்ட் எச் ஒக்சன்
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி: 011-3068185,2572940.

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

10-127

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வாத்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2013 |
| | | வெள்ளி | 11.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2013 |
| | | வியாழன் | 17.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2013 |
| | | வெள்ளி | 25.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2013 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.10.2013 |
| | | வெள்ளி | 08.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2013 |
| | | வெள்ளி | 15.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2013 |
| | | வெள்ளி | 22.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2013 |
| | | வெள்ளி | 29.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2013 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2013 |
| | | வெள்ளி | 13.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2013 |
| | | வெள்ளி | 20.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2013 |
| | | வெள்ளி | 27.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.